©
தமிழ்நாடு அரசு
2013

பதிவெண்: எம். 2

# ஈரோடு மாவட்ட அரசிதழ்

## சிறப்பு வெளியீடு

ஆணையின்படி வெளியிடப்பட்டது

ஈரோடு, ஜுலை 30, 2013
[விஜய, ஆடி 14 – திருவள்ளுவர் ஆண்டு 2044] [எண் 12

## உள்ளாட்சித்துறை அறிவிக்கை

ந.க.எண். 1783/2013 (இ-2), நாள் 28.6.2013

சத்தியமங்கலம் நகராட்சி

ஈரோடு மாவட்டம்

குடிநீர் துணை உபவிதிகள் திருத்தம்

**குடிநீர் குழாய் கட்டணங்கள் மற்றும் புதிய குடிநீர் குழாய் இணைப்பு வைப்புத் தொகை கட்டணங்கள் குடிநீர் லாரி கட்டணம் 1.7.2013ஆம் தேதி முதல் உயர்வு செய்தது தொடர்பான அறிவிக்கை.**

(நகர்மன்றத் தீர்மானம் எண். 100/நாள் 28.6.2013)

சத்தியமங்கலம் நகராட்சியில் திருத்தப்பட்ட 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 310ஆவது பிரிவின்படி சத்தியமங்கலம் நகர் மன்றம் தனது 28.6.2013 ஆம் தேதிய தீர்மானம் எண். 100-ன்படி குடிநீர் கட்டணங்களை கீழ்காணும் விபரங்களின்படி 1.7.2013 ஆம் தேதி முதல் உயர்வு செய்து இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. எனவே உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணங்கள், குடிநீர் குழாய் இணைப்பு வைப்புத் தொகை கட்டணங்கள், குடிநீர் லாரி கட்டணம் 1.7.2013 முதல் கீழ்காணும் விவரப்படி வசூல் செய்யப்படும் என அறிவிக்கை வெளியிடப்படுகிறது.

1) குடிநீர் கட்டணங்கள்.

| உபவிதி எண். | குடிநீர் கட்டணங்கள் உபயோகம். | தற்போது வசூல் செய்யப்படும் குடிநீர் கட்டணங்கள். | 1.7.2013 முதல் உயர்வு செய்யப்படும் குடிநீர் கட்டணங்கள். | 1.7.2013 முதல் வசூலிக்க உள்ள அளவுமானி கட்டணம் மற்றும் குடிநீர் மேல்வரி. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 8(அ) | வீட்டு உபயோகம் குடிநீர் இணைப்புகள். | மாதம் ஒன்றுக்கு ரூ.70 வீதம் (ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ.5/-) | மாதம் ஒன்றுக்கு ரூ.100 (ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ.10/-) | ரூ.5/- மற்றும் ரூ.5/-) |
| 8(ஆ) | வீட்டு உபயோகம் அல்லாத குடிநீர் இணைப்புகள். | மாதம் ஒன்றுக்கு ரூ.250 வீதம் (ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ.25/-) | மாதம் 1-க்கு ரூ.300/- (ஒவ்வொரு 1,000 லிட்டருக்கு ரூ.30) | ரூ.5/- மற்றும் ரூ.5/- |

2) வைப்புத் தொகைகள்.

| உபவிதி எண். | வைப்புத் தொகை உபயோகம் | தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் வைப்புத் தொகைகள். | 1.7.2013 முதல் உயர்வு செய்யப்படும் வைப்புத் தொகைகள். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 9(இ) | வீட்டு உபயோகம் குடிநீர் இணைப்புகள் வைப்புத் தொகை. | ரூ.2,500/- | ரூ.3,000/- |
| | வீட்டு உபயோகம் அல்லாத குடிநீர் இணைப்புகள் வைப்புத் தொகை. | ரூ.6,000/- | ரூ.7,000/- |

3) குடிநீர் லாரி கட்டணம்.

| தற்போது வசூல் செய்யப்பட்டு வரும் 1 லாரி குடிநீர் கட்டணம். | 1.7.2013 முதல் உயர்வு செய்யப்படும் 1 லாரி குடிநீர் கட்டணம். |
|---|---|
| (1) | (2) |
| ரூ.500/- | ரூ.1,000/- |

சத்தியமங்கலம்,
28-6-2013.

கு. தனலட்சுமி,
ஆணையாளர்,
சத்தியமங்கலம் நகராட்சி,
ஈரோடு மாவட்டம்.

தமிழ்நாடு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை இயக்குநரால் சேலம் அரசினர் கிளை அச்சகத்தில் அச்சிடப்பட்டு மாவட்ட ஆட்சியரால் வெளியிடப்பட்டது.